1994 நவம்பர் 4]

4—

முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புதுப்பித்தல்

***13786-திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், முத்துப்பேட்டை ஒன்றியம், அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களைப் புதுப்பிக்கவும், நிரந்தரமாக மருத்துவர்கள் தங்கி இருந்து மருத்துவ உதவி செய்யவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணி இயக்குநரிடம் செயற்குறிப்பு பெறப்பட்டபின், இது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டம், முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் குறித்து மூன்றாவது கேள்வியாக இந்த மாமன்றத்திலே நான் கிளப்புகின்றேன். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில்கள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. இதிலே நான் சொல்லக்கூடிய கருத்துக்களை அறிந்து, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை செயல்படுத்துவதற்கும், பொது மக்களுக்கு மருத்துவம் அளிப்பதற்குமான முயற்சிகளை அரசாங்கம் செய்யுமா என கேட்க விரும்புகிறேன். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கிராமப்புற மக்கள் அதிகமாக வருகிறார்கள். மேலும் இது பேரூராட்சிக்கு உட்பட்டு இருக்கிறது. இந்த மருத்துவமனை இறந்த மனிதர்களை போஸ்ட்-மார்ட்டம் செய்யக்கூடிய வசதி படைத்ததாகவும், பெண்களுக்கான பிரசவ அறைகளைக் கொண்டதாகவும், மருத்துவர்கள் இருந்து தொடர்ந்து பணிபுரியக்கூடியதாகவும் இருந்த நிலைமை மாறி பல ஆண்டுகாலமாக அங்கே போடப்பட்டிருக்கின்ற நோயாளிகளுக்கான பெட்கள் அத்தனையும் குப்பைக் கூளமாக மக்கிப்போய் இருக்கின்ற அவலமான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதே போன்று பிண பரிசோதனை செய்யக்கூடிய இடங்களும் இடிந்து போய் இருக்கின்றன. அதே

போன்று பெண்கள் பிரசவத்திற்கான அறைகள் எல்லாம் இடிந்து இன்றைக்கு மோசமாக இருக்கின்றன. ஆகவே மருத்துவர்களை அங்கே நியமித்தாலும் அவர்கள் வந்து இருந்து தங்களுடைய மருத்துவத்தைத் தொடங்குவதற்கு முடியாத ஒரு அவல நிலைமை அந்த மருத்துவமனையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய அதிகாரிகளிடமிருந்து பதில் கேட்டு அனுப்புவதாகச் சொல்லுகிறார்கள். இதை எப்போதுதான் செய்ய முடியும்? எத்தனை ஆண்டு காலத்திற்குள் செய்ய முடியும் என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 50 ஆண்டு காலத்திற்கு முன்னாலே கட்டப்பட்டு இருக்கக்கூடிய ஒரு கட்டடம். இது அவ்வப்போது தேவைக்கு ஏற்ப, தேவையான அளவிலே பராமரிக்கப்பட்டுக்கொண்டுதான் வந்து கொண்டிருக்கிறது. கிராமப்புறத்தில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் என்று சொன்னார்கள். அனேகமாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அத்தனையும் கிராமப்புறத்தில்தான் இருக்கின்றன. அது கிராமப்புறத்தில் உள்ள மக்களுக்காகத்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் இப்போது 2 மருத்துவர்கள் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். டாக்டர் மணியன், டாக்டர் சித்ரா என்ற இரண்டு மருத்துவர்கள் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே சில பணிகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஏற்கனவே இதைப்பற்றி தெரிவித்ததாகச் சொன்னார்கள். எனக்கும் அதைப்பற்றி ஏற்கனவே அங்கே இருந்து கடிதம் கூட எழுதியிருந்தார்கள். எனவே, அங்கே சென்று பார்த்தபோது 5 லட்ச ரூபாய் அதற்காக செலவழிக்கப்படவேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கேயிருந்து அதற்கான, முறையான புரப்போசல் கேட்கப்பட்டிருக்கிறது. அந்தப் புரப்போசல் வந்த பின்பு இது எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 மருத்துவர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்கள்

இருந்து அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே தங்களுடைய மருத்துவப் பணியைச் செய்வதற்கு போதுமான மேஜை, நாற்காலிகள் கூட இல்லை. ஆகவே, அவர்கள் நிரந்தரமாக அங்கே குடியிருந்து தங்களுடைய மருத்துவப் பணியைச் செய்வதற்கு முடியாத ஒரு நிலையில் வெளியூர்களிலிருந்து அவர்கள் நினைக்கிறபோது வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இல்லையென்றால் வாரத்திற்கு ஒரு தடவை வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு சென்று கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அவல நிலையில் இருப்பதோடு அங்கே துப்புரவுத் தொழிலாளர்கள் கிடையாது; அதேபோல் அங்கே செவிலியர்கள் இல்லை. இன்னும் சொல்லப்போனால், அந்த கூடாரத்தைப் போய்ப் பார்த்தால் பஞ்ச கல்யாணிகள் பல அங்கே படுத்துக்கிடக்கிற நிலைமையை அந்த மக்கள் போட்டோ எடுத்துப் போட்டு பத்திரிகையில் விளம்பரப்படுத்தக்கூடிய ஒரு அவலமான நிலைமை இருக்கிறது. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூட இதை கண்காணிக்கவில்லையே என்று பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே 4, 5 கழுதைகள் இருப்பதோடு பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிற ஒரு அவல நிலைமை தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இதை உடனடியாக தாங்கள் கேட்டறிந்து இதற்கான பணியை தாங்கள் செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் அந்த மருத்துவமனையின் பராமரிப்பிற்காக 5 லட்ச ரூபாய் செலவாகும் என்று எனக்கு ஏற்கனவே கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மருத்துவர்களைப் பொறுத்தவரையில் அந்த மருத்துவமனைக்கு அருகாமையில் அவர்களுக்குத் தேவையான குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படாமல் இருந்தால், அதற்குக் காரணம் இந்த குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படுவது என்பது ஒரு ஆண்டுக் காலத்திலே நடக்கக்கூடிய காரியம் அல்ல. காரணம் ஏறத்தாழ 1447 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 400–க்கு மட்டும்தான் குடியிருப்புகள் இருக்கின்றன. மற்றவைகளுக்கு ஆண்டுக்கு கொஞ்சமாக நாங்கள் எடுத்து கட்டிக்கொண்டு வருகிறோம். இது இந்த அரசாங்கத்தால் ஏற்பட்டு விட்ட குறைபாடு அல்ல. நீண்ட நாட்களாக பல்வேறு கட்டடங்கள், இங்கே சென்னையில் இருக்கிற மருத்துவமனையை எடுத்துக்கொண்டாலும் கூட மிகப் பெரிய மருத்துவமனை, தமிழகத்தில்

மட்டும் அல்ல, பக்கத்தில் இருக்கிற மாநிலங்களில் இருக்கிற மக்கள் கூட இங்கே வந்து சிகிச்சை பெறுகிற ஒரு இடம். அந்த இடமே கூட ஏறத்தாழ 170 ஆண்டு காலத்திற்கு முன்னால் கட்டிய அந்தக் கட்டடம் சரியான பராமரிப்பு இல்லாமல் மிக மோசமான நிலையில் இருந்தது. எனவே, ஒரு அரசாங்கம் பொறுப்பு ஏற்று 3 ஆண்டு காலத்திற்குள் இத்தனையும் செய்து முடித்துவிட முடியும் என்று நீங்கள் நம்பினால், உங்களால் அது முடியாது. எனவே, நாங்கள் படிப்படியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது ஜி.எச்.சில் நீங்கள் போய்ப் பார்த்தால் கூட ஒவ்வொரு வார்டாக எடுத்து மிகச் சிறப்பாக தனியார் மருத்துவமனைக்கு சரிசமமாக அதை நாங்கள் பராமரிப்பு செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொரு ஆண்டும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். மருத்துவர்களைப் பொறுத்தவரையில் ஒருவேளை குடியிருப்புகள் இல்லை என்று சொன்னால் 8 கிலோ மீட்டருக்குள்ளே அவர்கள் குடியிருக்க வேண்டும். தனியாக வாடகைக்கு கட்டடத்தைப் பிடித்து அவர்கள் குடியிருக்கவேண்டும் என்பது சட்ட விதிமுறைகளில் இருக்கிறது. எனவே, அப்படி இல்லாமல் இருந்தால் அவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். எனக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் மீது என்ன வருத்தம் என்று சொன்னால் இந்தப் பிரச்சினையை இந்தச் சட்டமன்றம் தொடங்கட்டும், தொடங்கிய இரண்டாவது நாள் இதைச் சொல்லலாம் என்று காத்திராமல் ஏற்கனவே அந்த மருத்துவர்கள் அங்கே தங்குவதில்லை என்ற தகவலை எனக்குக் கொடுத்திருந்தால் உரிய நடவடிக்கையை நான் எடுத்து இருக்க முடியும். பஞ்ச கல்யாணி எல்லாம் படுத்துக் கொண்டு இருந்ததைப் பார்த்துவிட்டு இவர் ஏன் சும்மா இருந்தார் என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு தொலைபேசியின் மூலமாகவாவது சொல்லி இருக்கலாம். எத்தனையோ முறை பேசியிருக்கிறார். அப்படிப் பேசுகிறபோது என்னிடம் சொல்லி இருக்கலாம். அவர் சொல்லாமல் விட்டு விட்டார் என்பது எனக்கு வருத்தம். இருந்தாலும் அதைப் பராமரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் தங்கள் இடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்குப் போவதாக இருந்தாலோ

1994 நவம்பர் 4]

அல்லது வேறொரு இடத்திலிருந்து தங்கள் இடத்திற்கு வருவதாக இருந்தாலோ, இப்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வந்தது போல, இதற்கு முன்னர் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் வந்தது போல வரவேண்டும். யாராவது உறுப்பினர் அப்போது உரையாற்றிக் கொண்டு இருந்தால், அவருக்கு இடையூறு ஏற்படாத அளவுக்கு வேறொரு இடத்தில் உட்கார்ந்து விட்டு, பேசுகின்ற உறுப்பினர் பேசி முடித்ததற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர்கள் வந்தார்களே, அதே முறையை எல்லோரும் பின்பற்றி தங்கள் இருக்கைகளுக்குச் செல்ல வேண்டும்.

வினா எண் 5, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5—

தேயிலைத் தூளில் கலப்படம் செய்வதைத் தடுக்க நடவடிக்கை

*20520–**டாக்டர் எம். கருப்புசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேயிலைத் தூளில் கலப்படம் செய்யப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கலப்பட தேயிலைத் தூள் மற்றும் கலப்பட தேநீர் தயாரிப்பாளர்கள் மீது உணவுப் பொருள்கள் கலப்பட சட்டத்தின் கீழ் உணவு ஆய்வாளர்கள் நடவடிக்கை எடுத்து வழக்கு தொடர்ந்து உள்ளார்கள்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 250 தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. உலகச்சந்தையில் மிகத் தரமான தேயிலை ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு இயங்கிக் கொண்டு